மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள், வெள்ளிக்கிழமை,
இ.ம.எண்.4/2026
இன்
அ.வ.எண்.204/2018
––––

1) சந்திரராஜ்
2) முத்தையா
3) கனகராஜ்
4) மாரியப்பன் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1) பூபதி
2) செவந்தி
3) செல்வகுமார்
4) பாபு
5) M/S.Jegatrakshaga Perumal Renewable Energy Pvt. Ltd, Through its Director Chennai ...1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்
6) மாவட்ட பதிவாளர் (சங்கங்கள் பதிவு) திருநெல்வேலி ...6 ம்எதிர்மனுதார்/கோரும் 6 ம்பிரதிவாதி

இம்மனுவானது 16.06.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.இளங்கோ அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துகண்ணு அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு</u>

**1)** அசல் வழக்கில் மாவட்டப் பதிவாளரை உத்தேச கட்சிக்காரராக சேர்ப்பதற்காக அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு U/s.151 சி.பி.சி–யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:11:51 +0530

**2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–**

இம்மனுதாரர் அசல் வழக்கில் 3ம்வாதி ஆவார். மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து இந்த அபிடவிட் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது கலப்பைபட்டி கிராமத்தில் இருந்த ஜவஹர் விவசாய சங்கம் என்று பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றது செல்லாது என விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் குறிப்பிடும் வேப்பங்குளம் ஜவஹர் விவசாய சங்கமானது பதிவு செய்யப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக சங்கத்தை ஆரம்பித்த உறுப்பினர்கள் இயற்கையெய்திய நிலையில் சட்டப்படி செயல்படுவது நின்றுபோய் இறந்த உறுப்பினர்களின் வாரிசுகள் ஒன்று சேர்த்து சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களை அனுபவம் செய்தும், குத்தகைக்கு விட்டு குத்தகை தொகையினை உறுப்பினர்கள் பங்கு வைத்துக்கொண்டும் இருந்து வந்த நிலையில் சங்கம் சரிவர செயல்படாத காரணத்தால் செயல்படாத சங்கம் என சங்கங்கள் பதிவு செய்யும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்பட்டு சங்கத்தினை கலைக்கப்பட்டதாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஷை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்துக்களை பொறுத்து பராமரிக்கும் வகைக்கு எந்தவித ஏற்பாடும் செய்யப்படாமல் விடுபட்டு போய்விட்டது. மேற்படி விவரங்கள் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விவரம் தெரிய வந்த பின் பதிவாளர் அலுவலகத்தில் முறையிட சென்றபோது தெரிய வந்தது. மேற்படி சங்கம் சட்டப்பூர்வமாக கலைக்கப்பட்ட சங்கமாக அரசு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டதால் பிரதிவாதிகள் பெற்றுள்ள கிரைய ஆவணத்தை மோசடியாக பதிவு செய்துள்ள செயல் சட்டவிரோதமான ஒன்று என விளம்புகை செய்ய தபசில் சொத்துக்களை அனுபவம் செய்து வரும் நபர்களின் சார்பாக வழக்கு தாக்கல் செய்து விசாரணை முடிந்த நிலையில் உள்ளது. இந்த

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:11:57 +0530

நிலையில் கலைக்கப்பட்ட சங்கத்தின் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ள பிரதிவாதிகளின் செயல்பாடு சட்டத்திற்கு எதிராகவும், நீதிமன்ற அனுமதி பெறாமலும் செயல்பட்ட கிரையமாக இருப்பதால் நேரடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. தற்போது கலைக்கப்பட்ட சங்கமாக இருந்தாலும் அந்த சங்கத்திற்கு அசையாச் சொத்துக்கள் எதுவும் இருந்தால் அதனை பராமரித்து கலைக்கப்பட்ட சங்கத்தின் நோக்கங்களையே நோக்கமாக கொண்ட சங்கத்திற்கு ஒப்படைப்பு செய்யும் பொறுப்பு மாவட்ட பதிவாளருக்கு உள்ளதால் அவர் இந்த வழக்கிற்கு தேவையான நபர் என்றும், அதனால் மாவட்ட பதிவாளரை கட்சிக்காராக சேர்ப்பது உகந்ததாக இருக்கும் என்று சட்டக்கருத்துரை கொடுக்கப்பட்டுள்ளதால் சட்டப்பிழை ஏற்படாவண்ணம் முன்னெச்சரிக்கையாக மாவட்ட பதிவாளர், திருநெல்வேலி அவர்களை கட்சிக்காரராக சேர்க்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளதால் அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்—</u>**

அசல் வழக்கானது 2018ம் வருடம் கோப்பிற்கு எடுக்கப்பட்டும், அசல் வழக்கின் விசாரணையை தாமதப்படுத்த வேண்டும் எனற் நோக்கத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் வேப்பங்குளம் ஜவகர் விவசாய சங்கத்திற்கு சிறிதும் சம்பந்தம் இல்லாதவர்கள் ஆவார்கள். 1, 2 எதிர்மனுதாரர்கள் சங்கத்திற்கு சொந்தமான சொத்தை சட்ட விதிகளை பின்பற்றி சரியான பிரதிபிரயோஜனத்திற்காக கிரையம் பெறப்பட்டதால் அது சட்டப்படி செல்லும் தன்மை கொண்டவை ஆகும். மாவட்ட பதிவாளரால் சங்க பதிவேட்டில் இருந்து சங்கம் நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்பதற்கு வழங்கப்பட்ட சான்று பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட சங்க பதிவாளரை அசல் வழக்கில் எதற்காக சேர்க்க வேண்டும் என்று தெளிவுபட

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:04 +0530

மனுவில் கூறவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பு விசாரணையின் போது சங்கம் சார்ந்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வாதிகளுக்கு வழக்குமூலம் இல்லாததால் அசல் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் மாவட்ட சங்க பதிவாளரை சேர்க்காமல் விட்டு விட்டு, வழக்கு விசாரணை முடிவுற்று வாதுரைக்காக போடப்பட்ட பின்னர் malafide indention உடன் தாக்கல் செய்துள்ளார். ஒரு சங்கமானது சங்க விதிகளை பின்பற்றி பதிவு செய்யப்பட்டு, பின்னாளில் சங்க சட்ட விதிகளை பின்பற்றாமல் இருந்து அது சங்க பதிவாளரால் முறையாக சங்க பிரதிநிதிகளுக்கு அறிவிப்பு கொடுத்து கால வரம்புக்குள் சரி செய்யாமல்விடும் பட்சத்தில் சங்கப்பதிவாளர் சங்கத்தை கலைத்து, சங்க பதிவேட்டிலிருந்து சங்க பதிவை நீக்கி உத்தரவிடாலும். அவ்வாறு பதிவு நீக்கம் செய்யப்பட்ட சங்கம் அதன் உறுப்பினர்களின் பங்குத்தொகையை கொண்டு அதன் சொத்துக்களை சங்கம் கலைக்கப்பட்ட பின்பு தனி நபர்களுக்கு விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு சங்கங்களை பதிவு செய்யும் சட்டம் 1975 Act No.27/1975 பிரிவு 42ல் பாரா 2ல் கலைக்கப்பட்ட சங்கமானது அதன் சொத்துக்களை பிற நபர்களுக்கு விற்பனை செய்யக்கூடாது என்பது ஷை விதிகளுக்கு பொருந்தாது என்றும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

**5) நீதிமன்ற பரிசீலனை–**

**5(1)** மனுதாரர்கள்/வாதிகளால் கலப்பைப்பட்டி கிராமத்தில் இருந்த 'ஜவஹர் விவசாய சங்கம்' என்று பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சொத்துக்களை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ள விவரம் தெரிந்து, அந்த கிரைய ஆவணம் இல்லா நிலையது என விளம்புகை செய்து, மனுதாரர்கள் வேப்பங்குளம் ஜவஹர்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:10 +0530

விவசாய சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருப்பின் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சங்கத்தை ஆரம்பித்த உறுப்பினர்கள் இயற்கையெய்திய நிலையில் சட்டப்படி செயல்படுவது நின்றுபோய் இறந்துபோன உறுப்பினர்களின் வாரிசுகள் ஒன்று சேர்ந்து சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களை அனுபவம் செய்தும், அனைவரும் சேர்ந்து குத்தகைக்கு விட்டு குத்தகையை தொகையை உறுப்பினர்களுக்குள் பங்கு வைத்துக் கொண்டும், இருந்து வந்த நிலையில் சங்கமானது சரியான முறையில் செயல்படாத காரணத்தினால் செயல்படாத சங்கம் என சங்கங்கள் பதிவு செய்யும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்பட்டு சங்கத்தினை கலைக்கப்பட்டதாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு சங்க பதிவாளர் அலுவலகத்தில் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக பதிவு செய்யப்பட்டுவிட்டது. "சங்கத்திற்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்துக்களை பொறுத்து பராமரிக்கும் வகையில் எந்தவித ஏற்பாடும் செய்யாமல் விடுபட்டுபோய்விட்டது". இந்த விவரங்கள் 1, 2 பிரதிவாதிகள் தபசில் சொத்தை கிரையம் பெற்ற விவரம் தெரிந்து பதிவாளர் அலுவலகம் சென்ற போது தெரிய வந்தது. சங்கம் சட்டப்பூர்வமாக செயல்படாது கலைக்கப்பட்ட சங்கமாக அரசு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணங்கள் மோசடியாக பதிவு செய்யப்பட்டது என விளம்புகை கோரி மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்து விசாரணை முடிந்த நிலையில், பிரதிவாதிகள் பெற்ற கிரையம் சட்டத்திற்கு எதிரானது என்றும், சட்டப்படி நீதிமன்ற அனுமதி பெறாமல் செயல்பட்ட கிரையமாக இருப்பதால் மனுதாரர்களால் நேரடியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 'கலைக்கப்பட்ட சங்கமாக இருந்தாலும் அந்த சங்கத்தின் அசையா சொத்துக்கள் ஏதும் இருந்தால் அந்த சொத்துக்களை பராமரித்து கலைக்கப்பட்ட சங்கத்தின் நோக்கங்களையே நோக்கமாக கொண்ட சங்கத்திற்கு ஒப்படைப்பு செய்யும் பொறுப்பு சங்கங்கள்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:16 +0530

பதிவு செய்யும் மாவட்ட பதிவாளர் இந்த வழக்கிற்கு தேவையான நபராக உள்ளதால் அவரை இந்த வழக்கில் புதிதாக கட்சி சேர்க்க வேண்டியிருப்பதால் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(2)** 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மனுதாரர்கள்/வாதிகள் வேப்பங்குளம் ஜவஹர் சங்கத்திற்கு சிறிதும் சம்பந்தம் இல்லாதவர்கள் ஆவார்கள். வாதிகளுக்கு எந்த வழக்கு மூலமும் இல்லை. 1, 2 எதிர்மனுதாரர்கள் சங்கத்திற்கு சொந்தமான சொத்தை சட்டவிதிகளை பின்பற்றி சட்டவிதிகளின்படி சரியான பிரதிபிரயோஜனத்திற்காக கிரையம் பெறப்பட்டது ஆகும். மாவட்ட பதிவாளர் இந்த வழக்கிற்கு தேவையற்ற நபர் ஆவார். மாவட்ட பதிவாளர் சங்க பதிவேட்டில் இருந்து சங்கம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதற்கு வழங்கப்பட்ட சான்று பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மாவட்ட பதிவாளர் இந்த வழக்கில் தேவையில்லாத கட்சிக்காரர் ஆவார். அசல் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில், தவறான எண்ணத்துடன் வழக்கினை காலம் கடத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். சங்கங்கள் பதிவு செய்யும் சட்டம் 1975 பிரிவு 42 விதிவிலக்கின் படி உறுப்பினர்களின் பங்கு தொகையை கிரையம் பெற்ற சொத்தை பிற நபர்களுககு விற்பனை செய்யக்கூடாது என்ற விதி பொருந்தாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5(3)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிடும் வேப்பங்குளம் ஜவஹர் சங்கம் சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் 1967ம் ஆண்டு 25 உறுப்பினர்களுடன் துவங்கப்பட்டு அந்த உறுப்பினர்களில் இறந்த உறுப்பினர்களுக்காக மற்ற உறுப்பினர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சங்கமானது 1990ம் ஆண்டு முடிவுக்கு வந்து, சங்கத்திற்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை தவிர இதர சொத்துக்கள் சங்க

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:23 +0530

உறுப்பினர்களின் சம்மதத்துடன் பைசல் செய்யப்பட்டது. பிராது சொத்து சங்க உறுப்பினர்களின் கால்நடை வளர்ப்புக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. அது கூட்டனுபவத்தில் இருந்து வருகிறது. சங்கம் சொத்தாகவே இருந்து வந்தது. சங்கம் பதிவு புதுப்பிக்கப்படவில்லை. 2018 ம் ஆண்டு மார்ச் மாதம் காற்றாலை பாகங்கள் 5 ம்பிரதிவாதி தரப்பில் நிறுவப்பட்ட போது விற்பனை செய்யப்பட்டுள்ள விவரம் தெரிய வந்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரையில் 1, 2, 4 மனுதாரர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் கிடையாது என்றும், அவர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், மனுதாரர்கள் வழக்கு தொடுப்பதற்கு எவ்வித தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை என்றும், வேப்பங்குளம் ஜவஹர் விவசாய சங்கம் நிர்வாக உறுப்பினர் பட்டியல் கொடுக்கவில்லை என கருதி 15.08.1979 ம் தேதி அரசு அறிவிப்பு எண்.32, பகுதி VI, பிரிவு I-ன் கீழ் கலைக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் 23.06.1982 ல் பிரிவு 44(4)ன் படி சங்க மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து முறையாக 2 வது அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு, சங்க பதிவு மட்டுமே மாவட்ட பதிவாளர் சங்க பதிவேட்டில் இருந்து Ref.No.ப.மு.6369/ஆ 3/82 நாள் 01.07.1982 ன்படி நீக்கம் செய்யப்பட்டது. சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளார்கள். மகாசபையே அனைத்து நடவடிக்கையும் செயல்படுத்தி வந்துள்ளது. இறந்த உறுப்பினர்களின் வாரிசுகளில் ஒருவர் இணைந்து இறந்த நபரின் சார்பாக Co–option உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 27.09.2007 ம் தேதி சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிய அறிவிப்பு கொடுக்கப்பட்டு மகாசபை கூட்டம் வேப்பங்குளம் கிராமம் பட்டா எண்.1263 ல் கண்டுள்ள 45 ஏக்கர் 50 செண்டை 16.05.2007 ல் நிறைவேற்றப்பட்ட 1 ம்தீர்மானத்தின் படியும், 29.07.2007 ல் நடந்த நிறைவேற்றப்பட்ட 1 ம்தீர்மானத்தின் படியும், சங்க உறுப்பினர் ஊர்க்காவலன் நேரடி வாரிசு சுவாமிராஜ் மனைவி செவந்தி, செல்லத்துரை மனைவி பூபதி

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:29 +0530

ஆகியோருக்கு கூட்டு கிரையம் கொடுக்க முழுமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன்படி கிரையம் பெற்றிருப்பதாலும், வேப்பங்குளம் ஜவஹர் விவசாய சங்க தலைவர் மற்றும் 29 உறுப்பினர்களை கட்சி சேர்க்காத வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என எதிர்கட்சி செய்யப்பட்டு, இருதரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, வழக்கு வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் சங்கங்கள் பதிவு செய்யும் மாவட்ட பதிவாளரை இந்த வழக்கில் புதிய உத்தேச 6ம்பிரதிவதியாக கட்சி சேர்க்க வேண்டியிருப்பதால் வழக்கை மறுதிறப்பு செய்ய இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(4)** மனுதாரர்கள் தரப்பு வாதுரையின் போது உத்தேச 6ம்பிரதிவாதியான மாவட்ட பதிவாளரை கட்சி சேர்ப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை என்பதும், சங்கம் கலைக்கப்பட்டிருந்தாலும் மாவட்ட பதிவாளர் அவரது பொறுப்பை நிறைவேற்ற கடமைப்பட்டவர் என்று மாவட்ட பதிவாளரை கட்சி சேர்க்க வேண்டியதால் மறுதிறப்பு செய்ய கோரிய வாதிகளின் மனுவை அனுமதிக்க வேண்டி வாதுரை செய்தார்.

**5(5)** 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் சங்கங்கள் பதிவு சட்டம் 1975 பிரிவு 42 விதிவிலக்கின்படி உறுப்பினர்களின் பங்கு தொகையினால் சங்கத்திற்காக வாங்கப்பட்ட சொத்து மாவட்ட பதிவாளர் பதிவை நீக்கி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் சங்க உறுப்பினரின் சம்மதத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து விற்பனை செய்யப்பட்டிருப்பதால் மாவட்ட பதிவாளர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என வாதுரை செய்து மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5(6)** வேப்பங்குளம் ஜவஹர் விவசாய சங்கம் 1967ம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். சங்கத்தின் உறுப்பினர்களின் பங்குத்தொகை மூலமாக

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:35 +0530

சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து வாங்கப்பட்டிருப்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். சங்கம் 1990ம்ஆண்டு சங்க பதிவை புதுப்பிக்காமல் முடிவுக்கு வந்திருப்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதியாகும். மனுதாரர்கள் அவரது மனு அபிடவிட்டில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதியாக கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சங்கத்தை ஆரம்பித்த உறுப்பினர்கள் இயற்கையெய்திய நிலையில் சட்டப்படி செயல்படுவது நின்றுபோய் இறந்துபோன உறுப்பினர்களின் வாரிசுகள் ஒன்று சேர்ந்து சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களை அனுபவம் செய்தும், அனைவரும் சேர்ந்து குத்தகைக்கு விட்டு குத்தகை தொகையை உறுப்பினர்களுக்குள் பங்கு வைத்துக் கொண்டும், இருந்து வந்த நிலையில் சங்கமானது சரியான முறையில் செயல்படாத காரணத்தினால் செயல்படாத சங்கம் என சங்கங்கள் பதிவு செய்யும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்பட்டு சங்கத்தினை கலைக்கப்பட்டதாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு சங்க பதிவாளர் அலுவலகத்தில் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக பதிவு செய்யப்பட்டுவிட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மாவட்ட பதிவாளர் பதிவு செய்து அனுப்பிய அறிவிப்புக்கு எதிராக சங்க உறுப்பினர்களுக்கு இடையே பாதிக்கப்பட்டலோ, குறைவுற்றிருந்தாலோ உறுப்பினர்கள் சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் கீழ் பிரிவு 44ல்

> (3) If, in any case where a registered society -
>
> (a) is being wound up, the Registrar has reasonable cause to believe either that no liquidator is acting or that the affairs of the registered society have been completely wound up: or
>
> (b) has not, for three consecutive financial years filed with the Registrar all or any of the documents referred to in clause (b) of sub-section (3) of section 16, the Registrar may publish in the Tamil Nadu Government

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.07.03 15:12:42 +0530

Gazette, and send to the registered society by registered post, a like notice as is provided in sub-section (2) of this section.

(4) At the expiration of the time mentioned in the notice referred to in sub-section (2), or sub-section (3), the Registrar may, unless cause to the contrary is previously shown by the registered society, strike its name off the register and shall publish notice thereof in the Tamil Nadu Government Gazette, and, on the publication of such notice, the registered society shall be deemed to be dissolved :

Provided that the liability, if any, of every officer and member of the registered society shall continue and may be enforced as if the registered society had not been dissolved.

(5) (a) If a registered society or any member or creditor thereof feels aggrieved by the name of the registered society having been struck off the register, such registered society, member or creditor may, within such period as may be prescribed from the date of the publication in the Tamil Nadu Government Gazette of the notice of striking off the name of the registered society, appeal-

(i) where the name of the registered society is struck off by the Inspector - General of Registration, to the Government ;

(ii) in any other case, to the Inspector-General of Registration.

**5(7)** மனுதாரர்கள் அதுபோன்று சங்கங்கள் பதிவாளர் உத்தரவுக்கு எதிராக எந்தவித மேல்முறையீடும் செய்ததாக மனுவில் குறிப்பிடப்படவில்லை. சங்க சொத்தினை மகாசபை கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அவர்கள் மறு கிரையம் கொடுத்த பின்னர் சங்கம் 1990ம் ஆண்டு சங்கம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் கலைக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டு சான்று வரப்பட்டுள்ளது மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொண்டு 1990 முதல் 2018ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலும் மாவட்ட பதிவாளருக்கு எதிராக எவ்வித அறிவிப்பும் மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு அசல் வழக்கில் சங்கம் ஒரு தரப்பினராக இல்லாத நிலையில் மாவட்ட பதிவாளரை

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.03 15:12:48 +0530

வழக்கினுடைய விசாரணை முடிக்கப்பட்டு Fag end stage ல் புதியதாக மாவட்ட பதிவாளரை கட்சி சேர்க்க வேண்டி தாக்கல் செய்த மனு வழக்கின் விசாரணையை மீண்டும் முதல்நிலைக்கே கொண்டு செல்லக்கூடியதாகவும் புதிய வழக்குமூலம் ஏற்பட்டு வழக்கினுடைய தன்மையும் மாறிவிடும் என்பதால் மனுதாரர்களின் மனு இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட சங்கம் இந்த வழக்கை தீர்வு செய்வதற்கு ஒரு தரப்பினராக இல்லாத நிலையில் மாவட்ட பதிவாளர் உத்தேச பிரதிவாதியாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று இ.ம.எண்.3/2026 மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால், மேற்படி காரணத்திற்காக அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய கோரிய இம்மனுவும் தள்ளுபடி செய்வது தான் உகந்தது என்று முடிவு செய்து மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**6) இறுதியாக,** மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 03.07.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.07.03 15:12:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி–</u>** இல்லை.
**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் –</u>** இல்லை.
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி –</u>** இல்லை.
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> –** இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.07.03 15:13:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.4/2026
இன்
அ.வ.எண்.204/2018
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்– 03.07.2026